# நிதி நிலை முடிவுகள்

இந்திய நிறுவனங்கள் நிதி நிலை முடிவுகளை வெளியிட்டுவருகின்றன. முன்னணி நிறுவனங்களின் வருவாய் மற்றும் லாப வளர்ச்சி பற்றிய புள்ளிவிவரங்கள் வருமாறு:–

## சாகர் சிமெண்ட்ஸ்

சாகர் சிமெண்ட்ஸ் நிறுவனம், செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ.8 கோடியை ஒட்டுமொத்த நிகர இழப்பாக கண்டுள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் இந்நிறுவனம் ரூ.8.54 கோடி லாபம் ஈட்டி இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் 9 சதவீதம் வளர்ச்சி கண்டு (ரூ.235 கோடியில் இருந்து) ரூ.258 கோடியாக அதிகரித்து இருக்கிறது.

## பினோலெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

பினோலெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், இரண்டாவது காலாண்டில் (ஜூலை–செப்டம்பர்) ரூ.76 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் அது ரூ.28 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 4 சதவீதம் அதிகரித்து உள்ளது.

## செஞ்சுரி டெக்ஸ்டைல்ஸ்

செஞ்சுரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், ஜூலை–செப்டம்பர் காலாண்டில், ரூ.157 கோடியை தனிப்பட்ட நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில் அது ரூ.53 கோடியாக இருந்தது. ஆக, லாபம் மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த லாபம் 40 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.393 கோடியாக உயர்ந்து இருக்கிறது. மொத்த செலவினம் 8.35 சதவீதம் அதிகரித்து ரூ.1,879 கோடியாக உள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில் அது ரூ.1,735 கோடியாக இருந்தது.

## ராம்கோ சிமெண்ட்ஸ்

ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம், இரண்டாவது காலாண்டில் (ஜூலை–செப்டம்பர்) ரூ.114 கோடியை தனிப்பட்ட நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் அது ரூ.169 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 32 சதவீதம் குறைந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் 11 சதவீதம் உயர்ந்து (ரூ.1,074 கோடியில் இருந்து) ரூ.1,189 கோடியாக அதிகரித்து உள்ளது. மொத்த செலவினம் 20 சதவீதம் உயர்ந்து ரூ.1,022 கோடியாக இருக்கிறது. சென்ற ஆண்டின் இதே காலத்தில் அது ரூ.854 கோடியாக இருந்தது.

## சோழா இன்வெஸ்ட்மெண்ட்

சோழா இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் நிறுவனம், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் ரூ.305 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.204 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 50 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த செயல்பாட்டு வருவாய் 24 சதவீதம் உயர்ந்து ரூ.1,676 கோடியாக இருக்கிறது. முந்தைய காலாண்டுடன் ஒப்பிடும் போது மொத்த வாராக்கடன் (4.5 சதவீதத்தில் இருந்து) 2.8 சதவீதமாக குறைந்துள்ளது. நிகர வாராக்கடன் (2.9 சதவீதத்தில் இருந்து) 1.6 சதவீதமாக குறைந்து இருக்கிறது.